
இந்திய அரசாங்கத்தின் முதன்மை
அறிவியல் ஆலோசகர் அலுவலகம் -
ஏப்ரல் 2020

# கொரோனா தொற்றுநோயின் போது, அடர்த்தியான மக்கள் தொகை உள்ள பகுதிகளில் சுற்றுப்புறத் தூய்மை மற்றும் சுகாதாரத்திற்கான வழிகாட்டுதல்கள்





இந்த கையேடு, மக்கள் தொகை அடர்த்தியான பகுதிகளில் கொரோனாவின் பரவலை கட்டுப்படுத்த தேவையான நடைமுறைகளை சுருக்கமாக விவரிக்கின்றது. இதை மாநிலங்கள் / உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்கள் பின்பற்றி நோய்பரவலை கட்டுப்படுத்தலாம்

இந்த வழிகாட்டுதல்களானது பொது கழிப்பறைகள் அல்லது பொது குளியல் வசதிகள் பயன்பாட்டில் உள்ள பகுதிகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.


கொரோனாத்தொற்று நோய் (COVID-19) என்பது புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸால் ஏற்படும் ஒரு தொற்று நோயாகும். கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் லேசான மற்றும் மிதமான சுவாச நோயை அனுபவிப்பார்கள். இவர்களில் பெரும்பாலானோர் சிறப்பு சிகிச்சை தேவையில்லாமலேயே குணமடைவார்கள். வயதானவர்கள், இருதய நோய், நீரிழிவு நோய், நாள்பட்ட சுவாச நோய் மற்றும் புற்றுநோய் போன்ற மருத்துவ பிரச்சினைகள் உள்ளவர்கள் இந்த நோயால் கடுமையாக பாதிக்கப்பட அதிக வாய்ப்புகள் உண்டு.

**கொரோனா வைரஸ் நோயைப் பற்றி நன்கு அறிவதே, இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் சிறந்த வழி. இந்த வைரஸ் இருமும்போதும் தும்மும்போதும் வாய் மற்றும் மூக்கில் இருந்து வெளியேறும் உமிழ்நீர் துளிகளால் தான் பிரதானமாக பரவுகிறது.**

உங்கள் கைகளை அடிக்கடி கழுவுவது, உங்கள் முகத்தைத் தொடாமல் இருப்பது, இருமும்போதும் தும்மும்போதும் முகத்தை ஒரு கைக்குட்டையில் மறைப்பது மற்றும் முகக்கவசம் அணிவது போன்ற செயல்களின் மூலம் உங்களையும் மற்றவர்களையும் தொற்றுநோயிலிருந்து பாதுகாக்கவும்.

# 1. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

கொரோனா நோய்த்தொற்றிற்கு இன்றளவில் எந்த சிகிச்சையும் கண்டறியப்படவில்லை. இத்தகையச் சூழலில், பொது குளியலறைகள் மற்றும் பொது கழிப்பறைகள் பகிரப்படும் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மிகச் சிறந்த வழி, நடத்தை மாற்றத்தை ஊக்குவிப்பது மற்றும் சுற்றுப்புறத்தூய்மை மற்றும் சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுவதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை செயல்படுத்துவதே ஆகும். தன்னார்வலர்கள் மற்றும் அதிகாரிகளின் உதவியோடு சமூக அளவில் ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்படும் எளிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் இந்த நோய் பரவுவதை கட்டுப்படுத்த பெரிதும் உதவும்.



சமூகத்தில் காய்ச்சல், சளி, வறட்டு இருமல், மூக்கு ஒழுகுதல் போன்ற அறிகுறிகளுடன் காணப்படும் இன்ஃப்லுவென்சா போன்ற உடல்நலக்குறைவுள்ள அனைத்து நோயாளிகளும் உடனடியாக அருகிலுள்ள ஆஷா / அங்கன்வாடி / முன்னணி பணியாளரிடம் தெரிவிப்பது மிகவும் முக்கியம்.




# கொரொனாவிற்கான ஆரோக்கிய சேது செயலி


11 மொழிகளில் கிடைக்கும் ஆரோக்கிய சேது செயலியானது உங்களுக்கு அருகில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் யாரேனும் இருந்தால் உங்களை எச்சரிக்கும். மேலும் உங்கள் அறிகுறிகளைக் கண்டறியவும் உங்களுக்கு மருத்துவ உதவியைப் பெறவும் உதவும்.

ஆரோக்கிய சேது செயலியை பதிவிறக்கம் செய்ய தேவையான க்யு ஆர் குறியீடு.

ஆரோக்கிய சேது செயலியைப் பயன்படுத்தி நீங்கள் உங்களை சுயப்பரிசோதனைக்குள்ளாக்கி உங்கள் உடல்நிலையை அருகில் உள்ள சுகாதார பணியாளரிடம் நீங்களாகவே அறிவிக்கலாம்.





# 2. முக்கிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முகக்கவசம்.



மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் உட்பட அனைத்து நபர்களும் எல்லா நேரங்களிலும் முகக்கவசங்களை அணிய வேண்டும்.

அனைவருக்கும் 100% பருத்தி மறுபயன்பாட்டு முகக்கவசங்களுக்கு அணுகல் இருக்கிறதா என்பதையும், அவற்றை ஒழுங்காக அணிந்துகொள்வது எப்படி என அனைவரும் அறிந்திருக்கிறார்களா என்பதையும் உறுதிசெய்து கொள்ளவும்.

நினைவில் கொள்ளவும்: எந்த அறிகுறிகளும் இல்லாத நபர்கள் மற்றவர்களுக்கு நோயை பரப்பக்கூடும், எனவே எல்லோரும் தங்களையும் மற்றவர்களையும் பாதுகாக்க முகக்கவசங்களை அணிகிறார்கள் என்பதை உறுதிசெய்யவும்



முகக்கவசத்தின் முன்பக்கத்தை ஒருபோதும் உங்கள் கைகளால் தொடாதீர்கள், அணிந்துவிட்டு அதை அகற்றும்போது அதனை பக்கவாட்டில் மட்டுமே தொடவும்.

## அனைவரும் தங்கள் முகக்கவசங்களை சரியாக சுத்தம் செய்யவும் மீண்டும் பயன்படுத்தவும் அறிந்திருக்கிறார்களா என்பதை உறுதி செய்யவும்.



முகக்கவசங்களை முறையாக சோப்பு மற்றும் வெந்நீரைப் பயன்படுத்தி சுத்தம் செய்து பின் சூரியஒளியில் உலர்த்த வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்களா என உறுதி செய்யவும் (இதற்கான பிரத்தியோக கைய்யேட்டின் இணைப்பு கீழே)



மற்றவர்களுடன் நெருக்கமாக வசிப்பவர்கள் தங்களால் முடிந்தவரை சமூக விலகலை பின்பற்றுவதோடு, விசிறி மற்றும் திறந்த சாளரங்களின் மூலம் தங்களின் அறைகளை எப்போதும் காற்றோட்டத்துடன் வைத்துக்கொள்ள வேண்டும். நெருங்கி இருக்கும் நேரங்களில் எப்போதும் முகக்கவசங்களை பயன்படுத்துங்கள்

15 மொழிகளில் உள்ள முகக்கவசம் குறித்த கையேட்டிற்கான க்யு ஆர் குறியீடு

முகக்கவசங்களை உருவாக்குதல், பயன்படுத்துதல் மற்றும் சுத்தம் செய்தல் குறித்த வழிகாட்டுதல்கள் இங்கே: https://www.mohfw.gov.in/pdf/Advisory&ManualonuseofHomemadeProtectiveCoverforFace&Mouth.pdf

# 3. சுற்றுப்புறத் தூய்மை மற்றும் சுகாதாரம்: கை கழுவுதல்.



ஒரு சமூகத்தில் நோய்த்தொற்று பரவ முக்கிய காரணங்களாக இருப்பவை கைப்பிடிகள், கைக்குமிழ்கள், கதவுகள் போன்ற பொதுவான பயன்பாட்டு மேற்பரப்புகள் ஆகும். எனவே அனைத்து பொது பகுதிகளிலும் குடியிருப்பாளர்கள் அடிக்கடி கைகளைக் கழுவுவதற்கு ஏதுவாக கால்களால் இயக்கப்படும் கை கழுவுதல் நிலையங்களை நிறுவுவது உகந்ததென பரிந்துரைக்கப்படுகிறது.

கால்களால் இயக்கப்படும் கை கழுவுதல் நிலையங்களானது தொற்றுநோய்களின் போது நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாகும்

மலிவு விலையில் சுயமாக- வடிவமைத்துகொள்ளக்கூடிய கை கழுவும் நிலையங்களுக்கான இரண்டு வடிவமைப்புகள் முன்மொழியப்பட்டுள்ளன. மேலும் அனைத்து பொது / சமூக கழிப்பறைகளில் நிரந்தரமாக நிறுவுவதற்காக மூன்றாவது வடிவமைப்பு ஒன்றும் பரிந்துரைக்கப்படுகிறது.



இந்த கை கழுவும் நிலையங்கள் நோயின் பரவலைக் கட்டுப்படுத்துவதோடு நில்லாமல் பயன்படுத்தப்படும் நீரின் அளவையும் கணிசமாக குறைக்கும். மேலும், இங்கே சோப்பின் பயன்பாட்டை அகற்ற, குளோரினை தண்ணீரில் சேர்க்கலாம்..


# கால்களால் இயக்கப்படும் கை கழுவுதல் நிலையங்களை வீடுகளுக்கு வெளியே நிருவுதல்.




இந்தப்படம் கால்களால் இயக்கப்படும் ஒரு “டிப்பி டாப்” அமைப்பை காட்டுகிறது. ரூ. 100 செலவில் சமூகங்களில் நிருவக்கூடிய இதை ஒவ்வொரு 3 அல்லது 4 வீடுகளிற்கிடையில் வைக்கலாம்.

# ஒரு டிப்பி டாப்பை உருவாக்குதல் விளக்கப்படங்கள் மற்றும் செயல்முறை Tippytap.org இலிருந்து எடுக்கப்பட்டுள்ளது


வீட்டிற்கு வெளியே படிக்கட்டுகள், கூரையை தாங்கும் கம்பங்கள், போன்ற இடத்தை அடையாளம் காணவும். அவ்விடம் ஒரு வடிகால் அமைப்பிற்கு அருகில் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள், பயன்படுத்தப்பட்ட நீர் வெளியேற அது தேவைப்படும்.





ஒரு ஆணி, கயிறு மற்றும் ஒரு சோப்புகட்டியை எடுத்துக்கொள்ளவும்




பிளாஸ்டிக் கேன் ஒன்றில் சூடான ஆணியால் 2 துளைகளை இடவும்




பின் சோப்பு கட்டியில் 1 துளையிடவும்



கேன் மீது ஒரு நீண்ட கயிற்றினைக் கட்டவும்



கயிற்றின் மறுமுனையை கால்மிதி மீது கட்டவும்



சோப்பு மற்றும் கேன் ஒரு தொங்கும் பட்டி/ அல்லது கிடைக்கக்கூடிய மேற்பரப்பில் வைக்கவும்





நீங்கள் பெரிய தட்டையான கிண்ணத்தில் தண்ணீரும் அத்தண்ணீருக்கு அடியில் சில கற்களையும் வைக்கலாம், இதன் மூலம் அது மெதுவாக வடிகாலில் பாயும்



உங்கள் டிப்பி டாப் கை கழுவுதல் சாதனம் பயன்படுத்த தயாராக உள்ளது. மீண்டும் மாசுபடுமோ என்ற பயமின்றி இப்போது உங்கள் கைகளை தைரியமாக கழுவலாம்.

# கால்களால் இயக்கப்படும் கை கழுவுதல் நிலையங்களை பொதுக்கழிப்பிடங்களில் மற்றும் இதர இடங்களில் நிருவுதல்






செயல்படுத்தியவர்கள்:
தாஷி பாம்பர் (ஆய்வக உதவியாளர்)
சோனம் செரிங் (ஓட்டுநர், ஒப்பந்த ஊழியர்)
அமலாக்க இடம்: இந்திய வானியல் ஆய்வகம், ஹான்லே, லடாக்

கால்களால் இயக்கப்படும் முறைமைகளின் பல எடுத்துக்காட்டுகள் காட்டப்பட்டுள்ளன. இவற்றை விரைவாக உருவாக்கவேண்டுமானால், மேலே காட்டப்பட்டுள்ள இயந்திர பதிப்பை பரிந்துரைக்கிறோம் (நன்றி: டாக்டர். டோர்ஜ் அங்சுக்)

பொது கழிப்பறைகளுக்கு வெளியே




## கைக்கழுவும் நிலையத்திற்கு தேவையான பொருட்கள்:

(1) குவளை
(2) கவிழ்முகப்பு குழாய்முனை
(3) சிபி காம்பு (குழாய் கழுத்தை நீட்ட)
(4) உலோக ஸ்ப்ரிங்க் (சுருள்வில்) (குழாயை மூடிய நிலைக்குக்கொண்டுவர)
(5) உலோக கீற்றுகள் (கம்பி கயிறு மற்றும் ஸ்ப்ரிங்கை தாங்க)
(6) உலோக கம்பி கயிறு (குழாய் கம்பியை கீழ்வரை நீட்டி பாத நெம்புகோலுடன் இணைக்க)
(7) நட்டு மற்றும் போல்ட்டுகள்.






# பொது இடங்களில் ஒரு பொது கை கழுவும் நிலையத்தை எப்படி உருவாக்குவது?

எளிதில் கிடைக்கக்கூடிய குவளைகள் அல்லது தொட்டிகளைக் கொண்டு நீர்த்தொட்டிகளிற்கு பல மாற்றுகளை உருவாக்கலாம். உதாரணமாக கடையில் கிடைக்கும் 20 லிட்டர் பாட்டில்களில் நீர் வெளியேற்றும் அமைப்பில் ஒரு குழாயை இணைத்து வடிகாலில் நீர் பாயும்படி அமைக்கலாம்.

SIDE VIEW








அருகில் இருக்கும் எந்தவொரு குவளை/தொட்டியையும் பயன்படுத்தலாம்: தரையில் அமர்த்திய ஒரு 20 லிட்டர் அமைப்பு பரிந்துரைக்கப்படுகிறது. 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 வாளிகளுடனான இவ்வமைப்பு விரைவாக மாற்றக்கூடியதாகவும் இருக்கும்.

கால்களால் இயக்கப்படும் மிதிப்படியை எந்தவொரு உலோக துண்டாலும் செய்யலாம்



TOP VIEW





நீர்க்குழாய் ஒரு பிரேக் கம்பியில் இணைக்கப்பட்ட கால் மிதிப்படியினால் கட்டுப்படுத்தப்படுகிறது.



# எங்கும் எடுத்துச் செல்லக் கூடிய கை கழுவும் நிலையங்களை உருவாக்குவதில் உள்ள இதர மாறுதல்கள்:





நீர் வடிப்பான்களில் பயன்படுத்தப்படும் ஸ்ப்ரிங்குடன் உள்ள நீர்க்குழாய்களை பிரேக் கம்பிகளின் உதவியுடன் கால்மிதிப்படிகளில் இணைத்து உபயோகிக்கலாம்




வால்வைத் திறக்க உள்ளிருந்து தள்ளி வால்வை திறந்து நீர்க்குழாயை இயக்க அவற்றை கால்களால் இயக்கப்படும் இரும்பு கம்பிகளுடன் பொருத்தலாம்.


# நிரந்தர கை கழுவுதல் நிலையத்திற்கான இந்த வடிவமைப்பானது அனைத்து பொது / சமூக கழிப்பறைகளிலும் நிறுவ பரிந்துரைக்கப்படுகிறது.





-அனைத்து நிலையான பகுதிகளையும் பயன்படுத்துகிறது
-நட்டுகள் மற்றும் போல்டுகளின் கட்டுமானம்
-மாடுலர் ஃபோலி டிசைன்ஸ் பிரைவேட் லிமிடெட் வடிவமைத்தது.




ஃபோலி டிசைன்ஸ் பிரைவேட் லிமிடெட் வடிவமைத்தது.

# கழுவுவது எப்படி கைகளை



# 4. சுற்றுப்புறத் தூய்மை மற்றும் சுகாதாரம்:
# கழிப்பறை பயன்பாடு.

தனிநபர்கள் திறந்த வெளியில் மலம் கழிக்கக்கூடாது, அதற்கு பதிலாக கழிப்பறையைப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் பிறகு கழிப்பறையை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். மோசமாக பயன்படுத்தப்பட்ட/ பராமரிக்கப்படும் சமூக கழிப்பறைகள் நோயின் முக்கிய மூலங்களாக செயல்படும். **சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமல் மக்கள் கழிப்பறைகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தொற்றுநோயைத் தடுக்க, கீழ்குறிப்பிட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்**



கழிப்பறையிலும் முகக்கவசங்களை அணியவும்



உங்கள் மூக்கு, கண்கள் அல்லது வாயைத் தொடாதீர்கள், குறிப்பாக கழிப்பறைக்குள் இருக்கும்போது.



கழிப்பறை பயன்பாட்டிற்குப் பிறகு அதாவது மலம் கழித்தல் மற்றும் சிறுநீர் கழித்தலிற்கு பின், சோப்பினால் கைகளை நன்கு கழுவவும்



கழிப்பறைகளுக்கு அருகில் மற்றும் பிற பொது இடங்களில் ஒருவருக்கொருவர் பாதுகாப்பான இடைவெளியை பராமரிக்கவும். கைப்பிடி, தாழ்ப்பாள், விளிம்பு உள்ளிட்ட கதவு மேற்பரப்புகளைத் தொடுவதை தவிர்கவும். தொட்டால் அவை மீது சோப்பு நீர் தெளிக்கவும்.



வெறும் கால்களுடன் கழிப்பறைக்குள் ஒருபோதும் நுழைய வேண்டாம். எப்போதும் காலணிகளை அணியவும்.



கழிப்பறையில் துப்பவோ தும்மவோ வேண்டாம்.
கழிப்பறையில் எப்போதும் முகக்கவசங்களைஅணியவும்




கழுவும் தொட்டிகளில் அதிக நெரிசலைத் தவிர்க்கவும்

# 5. சுற்றுப்புறத் தூய்மை மற்றும் சுகாதாரம்: கிருமிநாசினிகள்

**அதிகாரிகள் மற்றும் தன்னார்வலர்கள்:** ஒரு நாளைக்கு மூன்று முறை குளோரின் கொண்ட கிருமிநாசினியை தெளித்தல் அல்லது துடைப்பதன் மூலம் வீதிகள், கழிப்பறைகள் மற்றும் சுவர்களை சுத்தப்படுத்த வேண்டும்


குளோரின் அடிப்படையிலான கிருமிநாசினி கரைசலின் பயன்படுத்த வேண்டிய செறிவு:




| கிடைக்கக்கூடிய ஹைப்போகுளோரைட் கரைசல் (ப்ளீச், பீனைல்) | தேவையான குளோரின் செறிவு | 1000 மில்லி தயாரிக்க | |
|---|---|---|---|
| | | குளோரின் கரைசல் (மில்லி) | தண்ணீரை மில்லி அளவில் சேர்க்கவும் |
| 5% | 1% | 200 | 800 |
| 10% | 1% | 100 | 900 |

•குறிப்பிட்ட பகுதிகளில் தெளிப்பு முறையில் தேவைக்கேற்ப சுத்தம் செய்வதை அதிகாரிகள் கருத்தில் கொள்ளலாம்

•சோப்பு அடிப்படையிலான கை கழுவுதலுக்கு மாற்றாக, பொது இடங்களில் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் குளோரின் அடிப்படையிலான கை துடைப்பான் கரைசலை பயன்படுத்துவதை அதிகாரிகள் பரிசீலிக்கலாம்.



**தனிநபர்கள்:** 5 லிட்டர் வாளி தண்ணீரில் கடைகளில் கிடைக்கும் பினாயில், குளோரின் ப்ளீச் அல்லது லைசாலை 2-3 ஸ்பூன்கள் கலந்து, தரையையும் பிற மேற்பரப்புகளையும் (நாற்காலி, மேஜை, கதவு, சுவிட்சுகள் போன்றவை) அந்த கரைசலால் துடைக்கவும். இக்கிருமிநாசினி குறைந்தது 2 நிமிடங்களாவது அப்பரப்புகளில் இருக்கிறதென்பதை உறுதி செய்துகொள்ளவும்




*கிருமிநாசினிகளை பெற உள்ளூர் சமூக சுகாதார பணியாளர்கள் மூலம் ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

# கூடுதல் நடவடிக்கைகள்

அ. பயன்படுத்துவதற்கு முன்பு பழங்களையும் காய்கறிகளையும் நன்கு கழுவவும்.
ஆ. எப்பொழுதும் நெகிழி பால் பைகள் மற்றும் இதர நெகிழி பைகளில் அடைக்கப்பட்ட உணவு பொருட்களை பயன்படுத்தும் முன்பு சோப்பால் கழுவவும்..

முன்மொழியப்பட்ட முறைகளின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த, அதிகாரிகள் மற்றும் தன்னார்வலர்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்:

1. அடிக்கடி கைகளை கழுவுவதன் முக்கியத்துவம் மற்றும் சமூக இடைவெளியைப் பற்றிய **தீவிரமான சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தல்**
2. மக்களுடன் இணைந்து கை கழுவுதல் நிலையங்களை **நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல்**
3. சமூகங்களுக்கு **நீர் கிடைப்பதை உறுதி செய்தல்**
4. **சோப்பு மற்றும் கிருமிநாசினிகளை தொடர்ந்து நிரப்புதல்**
5. **அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் கண்டிப்பாகவும் கடுமையாகவும் பின்பற்றுதல்**
6. நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த **அனைத்து முன்னணி பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுடன் ஒத்துழைதல் மற்றும் மதித்தல்.**

குறிப்பு: கழிவு நீர் கண்காணிப்பு (வழக்கமான கழிவுநீரை சோதனை) ஒரு ஆரம்ப எச்சரிக்கை கருவியாகப் பயன்படுத்தலாம், குறிப்பாக சமூக இடைவெளி நடவடிக்கைகள் அகற்றப்பட்ட பின்பு.

## இந்திய அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம்
## - ஏப்ரல் 2020



இந்த வழிகாட்டுதலில் உள்ள வடிவமைப்பு மற்றும் எடுத்துக்காட்டுகள் அனைத்து இந்திய அரசு துறைகளுக்கும் கிடைக்கின்றன. இதைப்பயன்படுத்தி தனிப்பயன் / உள்ளூரில் கிடைக்கும் பொருட்களை கொண்டும் உருவாக்கலாம். தேவைப்பட்டால் கோரிக்கையின் பேரில் அதிக தீர்மானங்களில் வழங்கப்படலாம்.

வடிவமைப்பு:
வெர்டிவர்

மொழிபெயர்ப்பு:
ரிசர்ச் மேட்டர்சு,
குப்பி லேப்ஸ்